செ.வெ.எண். 54/ஜனவரி  தேதி : 26.01.2017

# தருமபுரி மாவட்டம், மாவட்ட விளையாட்டரங்கில் நடைபெற்ற குடியரசு தின விழாவில் 192 பயனாளிகளுக்கு ரூ. 1 கோடியே 21 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும், பாராட்டு நற்சான்றிதழ்களையும் மற்றும் கேடயங்களையும் மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.






தருமபுரி மாவட்டம், மாவட்ட விளையாட்டரங்கில் நடைபெற்ற குடியரசு தின விழாவில் மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (26.01.2017) தேசிய கொடியை ஏற்றி வைத்து மரியாதை செய்தார்.

இவ்விழாவில் இயற்கை மரணத்திற்கான நிவாரணம், நலிந்தோர் குடும்ப நல உதவித்தொகை மற்றும் IGNOAP 8 பயனாளிகளுக்கும், மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை மற்றும் இயற்கை மரணம் நிவாரண உதவித்தொகை 35 பயனாளிகளுக்கும், விபத்து நிவாரணம் உதவித்தொகை மற்றும் நலிந்தோர் குடும்ப நல உதவித்தொகை 26 பயனாளிகளுக்கும், திருமண உதவித்தொகை, PHP, HIV மற்றும் TB உதவித்தொகை 10 பயனாளிகளுக்கும், திருமண உதவித்தொகை மற்றும் இயற்கை மரணம் நிவாரண உதவித்தொகை 10 பயனாளிகளுக்கும், குடும்ப நல உதவித்தொகை & IGNOAP 10 பயனாளிகளுக்கும், குடும்ப நல உதவித்தொகை & IGNOAP 5 பயனாளிகளுக்கும், புதிய குடும்ப அட்டை வழங்குதல் 10 பயனாளிகளுக்கும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல மாணவ/மாணவியர்களுக்கு தந்தை பெரியார் நினைவு பரிசு 8 பயனாளிகளுக்கும், நவீன செயற்கை கால் (முட்டிக்கு மேல்) 2 பயனாளிகளுக்கும், போரின் போது மரணமுற்ற ஊனமுற்ற படைவீரர்களை சார்ந்தோர்களுக்கு வருடாந்திர பராமரிப்பு மானியம் 3 பயனாளிகளுக்கும், தாட்கோ துறையின் மூலம் சுயஉதவிக்குழுக்களுக்கு கடனுதவி 14 பயனாளிகளுக்கும், தோட்டக்கலைத் துறையின் மூலம் MIDH வெங்காய சேமிப்பு கிடங்கு 3 பயனாளிகளுக்கும், MIDH தக்காளி பரப்பு விரிவாக்கம் 1 பயனாளிக்கும், MIDH செண்டுமல்லி பரப்பு விரிவாக்கம் 1 பயனாளிக்கும், வேளாண்மைத்துறையின் சார்பில் ரோட்டாவேட்டர் வேளாண் கருவி 2 பயனாளிகளுக்கும், மாவட்ட தொழில் மையத்தின் சார்பில் முதல் 3 இடங்களைப் பிடித்த ஊட்டி டீ விற்பனையாளர்களுக்கு தலா ரூ. 3 ஆயிரத்திற்கான காசோலைகளையும் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களும் 3 நபர்களுக்கும், புது வாழ்வுத் திட்டத்தின் சார்பில் மகளிர் குழுக்களுக்கு தனிநபர் கடன் 41 பயனாளிகளுக்கும் என மொத்தம் 192 பயனாளிகளுக்கு ரூ. 1 கோடியே 21 இலட்சத்து 3 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும், பின்னர் காவல் துறையின் சார்பில் 19 காவலர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களும், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் சார்பில் அண்ணாமலையார் சுய உதவிக்குழு மற்றும் முனீஸ்வரன் சுய உதவிக்குழுக்களுக்கு கடன் தொகைக்கான காசோலைகள் 10 நபர்களுக்கும், வருவாய்த்துறையின் சார்பில் 47 நபர்களுக்கும், ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் 28 நபர்களுக்கும், சுகாதாரத் துறையின் சார்பில் 18 நபர்களுக்கும், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்துறையின் சார்பில் 3 நபர்களுக்கும், போக்குவரத்துறையின் சார்பில் 2 நபர்களுக்கும், கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் 13 நபர்களுக்கும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் 3 நபர்களுக்கும், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் 3 நபர்களுக்கும், வேளாண்மைத்துறையின் சார்பில் 11 நபர்களுக்கும், பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் 28 நபர்களுக்கும், நெடுஞ்சாலைத்துறையின் சார்பில் 9 நபர்களுக்கும், பேரூராட்சித்துறையின் சார்பில் 5 நபர்களுக்கும் கருவூலத்துறையின் சார்பில் 3 நபர்களுக்கும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் 15 நபர்களுக்கும், நில அளவைத்துறையின் சார்பில் 5 நபர்களுக்கும், E District Manager சார்பில் 1 நபருக்கும், 108 ஆம்புலன்ஸ் சார்பில் 3 நபர்களுக்கும், சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலையின் சார்பில் 2 நபர்கள் என 218 நபர்களுக்கு பாராட்டு நற்சான்றிதழ்களையும் மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

முன்னதாக சுதந்திர போராட்ட தியாகிகளுக்கு மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். மேலும்

விளையாட்டரங்கில் பள்ளிக் குழந்தைகள் மற்றும் மாணவ, மாணவியர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

இவ்விழாவில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. பண்டிகங்காதர்,இ.கா.ப., அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் திரு. அ. சங்கர், மாவட்ட வன அலுவலர் திரு. திருமால்,இ.வ.ப., மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு. சுவாமிநாதன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. எம். காளிதாசன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி. மகேஸ்வரி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு. இரா. சண்முகசுந்தரம், கோட்டாட்சியர்கள் திரு. இராமமூர்த்தி, திருமதி. கவிதா, அனைத்து காவல்துறை அலுவலர்கள் மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள் உட்பட பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.